முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 10 திகதி முதல்

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 17 திகதி வரை

(26.11.2023 ஞாயிறு முதல் 03.12.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. என்ன என்ன கொடுமைகளோ
இந்த கலியின் அவதிகளாய்
வண்ண வண்ணக் காகிதங்கள்
வையகத்தில் ஆளுமை நடத்துதப்பா
2. அப்பனே ஏனிந்த அவலமென
அரங்கஞானி அவதாரமெடுத்து வேண்ட
ஒப்புகொண்டு அகத்திய மகரிஷியும்
ஓதிடுவேன் இந்தியா தமிழகம் தன்னில்
3. தன்னிலே சோபகிருது தேள்திங்கள்
தசதிகதி மேலாக மூவைபீர் திகதிவரை
இன்னாளில் நடக்கும் வார நிகழ்வாக
எதிர்கால பலன்குறித்த ஆசி உரைப்பேன்
4. உரைக்கவே கலி மாயோன் தானும்
ஊழல் கறைபட செயல்முறை ஆக்கிட
கறைபடிந்த வர்க்கமெலாம் களைஎடுக்கும்
காலம் கனிய தீவழியை விட்டுவிலகி
5. விலகியே தருமஞானப் பாதையை
விடியலென பிடித்துக் கொண்டால்போதும்
ஊழல் காகிதங்கள் அனைத்தும்
உயர்வான தருமநிதியாக மாறி

6. மாறியே வாழுகின்ற காலமதில்
மதிப்பும் பாதுகாப்பும் தருவதுடன்
ஆறுமுகப் பெருமான் ஆசியும் கிட்டி
ஆளுமையான இந்தியா தமிழகத்துக்கு
7. ஆக்கமுடன் செயல் திட்டங்கள்
அனைத்தும் வெற்றி காண்பதுடன்
தேக்கமின்றி இயற்கை பேரிடரையும்
தெளிவுபட வெல்லும் பாதுகாக்கும்
8. பாதுகாக்கும் தருமதெய்வபலம் கூடி
பாடிடுவேன் மக்கள் ஆதரவுபட
பூதலத்தில் அரங்கன் அவதார **நோக்கம்**
புண்ணிய ஞானஆட்சி தரும்
9. ஆட்சிதரும் சிறந்த ஆளுமையாக
அறிவிப்பேன் இந்தியா தமிழகத்தில்
ஆட்சிமலரும் உலகுக்கு முன்னோடியாக
ஆளுமைகள் கறைபடா வண்ணம்
10.வண்ணமுடன் ஞானிகள் ஆட்சியாக
வருங்காலம் வளர்ச்சி பாதுகாப்பென
எண்ணம் வைத்து அரங்கேற்றிடும்
இணையில்லா நல்லாட்சியாக மாறும்
11. மாறுதலை அரங்கஞானி அவதாரத்தில்
முருகப்பெருமானே வழிநடத்தி வர
ஆறுதல் தேடி ஓங்காரகுடில் நாடி
அனைவரும் வர அற்புதம் நடக்கும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 10ம் நாள் 26.11.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 17ம் நாள் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

இந்த கலியுகத்தின் கொடுமைகளாய் பலப்பல கொடுமைகள் நடந்தேறுகிறது இவ்வுலகினில் ஏட்டளவில்தான் அனைத்தும் நடக்கின்றன என்றே மனம் வருந்தி ஏனிந்த அவலநிலை என வேண்டியே அரங்க மகானும் அவதரித்து ஞானிகளிடம் மாற்றம் வேண்டி தவம் செய்து வர அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 10ம் நாள் 26.11.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 17ம் நாள் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளாக வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மாமாயை உண்டாக்கும் மாயாவி கலியுக புருஷனும் நாட்டினில் ஊழல் கறை உண்டாகும்படி செய்து ஊழல் செய்வதையே செயல்முறையாக ஆக்கி விட்டானப்பா. கலியுக மாயையுள் சிக்கிய மக்கள் எல்லாம் கறை படிந்தோர் ஆனாரப்பா நல்லோர் வாழ கறை படிந்தவர்களை களையெடுக்கும் காலம் கனிய வேண்டுமாயின் அவரவரும் தீமையான பாதையை விட்டு விலகி தருமஞான பாதையை பின்பற்றினால் போதுமப்பா ஊழல் நிலைகள் எல்லாம் மாற்றம் அடைந்து ஊழல் வழி சேர்த்த பொருளெல்லாம் தருமவழிக்கு வந்து தருமத்திற்கு பயன்பட்டு வாழும் காலத்திலேயே நன்மதிப்பை பெறுவார்கள் பாதுகாப்பையும் பெறுவார்கள் அவர்கள் மாறியதாலே முருகப்பெருமானின் கருணையையும் பெற்று மேன்மை அடைவார்கள்.

நாட்டின் செயல்பாடுகள் எல்லாம் நல்லவையாக மாறி செயல்திட்டங்கள் வெற்றி கண்டு இயற்கை பேரிடர்கள் இல்லாத வகையிலே பாதுகாப்பையும் பெறுவதோடு இயற்கை பேரிடரை வெல்லும் வாய்ப்பும் கிடைக்கும் நாட்டினில் தெய்வபலம் பெருகும் மக்கள் ஆதரவுடன் அரங்க மகான் விரும்புகின்ற மகத்துவம் மிக்க ஞானிகள் வழி நடத்தும் ஞானிகள் ஆட்சியும் உண்டாகுமப்பா உலகிலேயே மிகச் சிறந்த ஆட்சியாக மாறிடும். உலக நாடுகளுக்கு பாரத தேசத்தின் ஆட்சி முறை கறை படாத ஆட்சியாக முன் மாதிரி ஆட்சியாக

மாறிடும். அற்புதமான வளர்ச்சி பணிகளை தேசம் கண்டு ஈடு இணையில்லா நல்லாட்சியாக மாறிடுமப்பா.

உலகமெங்கும் அற்புத மாற்றங்களை அரங்க மகான் மூலமாக முருகப்பெருமானே வழிநடத்தி வருவதினாலே அரங்கரின் ஓங்காரக் குடில்தனை நாடி உலகோர் வந்து அரங்க மகான் கூறும் தயவு நெறியை ஏற்று கடைப்பிடித்திட அனேகம் அனேகம் அற்புதங்கள் உலகினில் நடந்தேறுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–